O.S.12 -2023

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.12 /2023

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி சிதம்பரம் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சிதம்பரம் | வயது | : | 60/2026 |
| தகப்பனார் பெயர் | : | கருப்பன் | தாலுகா | : | திருமயம் |
| கிராமம் | : | ஆனைவாரி | தொழில் | : | விவசாயம் |

நாள்-07.02.2026

பி.வா.சா.1

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் பிரதிவாதி தரப்பு சாட்சியாவேன். நான் முதல் விசாரணை நிரூபண பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேன். அதில் உள்ள விசயங்கள் உண்மையானது.

1) வாதி மற்றும் வாதியின் மனைவி மீனாள் எனக்கு எழுதி கொடுத்த கைநோட்டு **பி.வா.சா.ஆ-1,**

(வாதி தரப்பில் மேற்படி ஆவணத்தின் நம்பகதன்மை மற்றும் ஏற்புதன்மை குறித்து ஆட்சேபணை செய்யப்படுகிறது)

**உத்தரவு**

உச்சநீதிமன்றம் விசாரணை நீதிமன்றங்களுக்கு வழக்கு விசாரணையிலும் சாட்சியம் பதிவு செய்யும்போதும் ஆவணங்களை குறியீடு செய்யும்போதும் ஏதேனும் ஆட்சேபணை செய்யப்பட்டால் அந்த ஆட்சேபணையை பதிவு செய்து கொண்டு தீர்ப்பின் இறுதியில் அது குறித்து முடிவு செய்ய வேண்டும் என்று Bipin Shanthilal Panchlal Vs State of Gukarat and another 2001(3) SCC Page -1 வழக்கில் வழங்கிய வழிகாட்டுதலின் அடிப்படையில் மேற்படி ஆவணம் குறித்து வாதி தரப்பில் முன்னிலையாகிய வழக்கறிஞரின் ஆட்சேபணையை பதிவு செய்து மேற்படி ஆவணத்தின் நம்பகத்தன்மை மற்றும் ஏற்புத்தன்மை குறித்து வழக்கின் தீர்ப்பில் முடிவு செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக வாய்தா வழங்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.